**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 117/2022**

பெயர் : பரதன் (PW2)

த/க/பெ. :

தேதி : 20.09.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் கூத்தியாம்பேட்டையில் கிழக்கு தெருவில் வசிக்கிறேன். வாதி வடக்கு தெருவில் வசிக்கிறார். நான் விவசாயவேலைக்கு யார் அழைத்தாலும் செல்வேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் என் பிராமாண முதல் வாக்குமூலத்தை நான் படித்து பார்க்க வில்லை. கைரேகை வைத்தேன் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரத்திற்கு யார் மீது வழகது போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி சொத்தின் சர்வே எண். விஸ்திரனம் தெரியாது. வாதி வேலைக்கு அழைத்தால் கூலி வேலை செய்வேன் என்றால்சரிதான். யார் அழைத்தாலும் செய்வேன். என்னை பொய் சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. 20 வருடங்களுக்கு மேலாக அவர் தாத்தா காலத்தில் இருந்தே தாவா சொத்தை தெரியும். தாவாசொத்து கிழக்கு மேற்காக ரோட்டை பார்த்தவாறு உள்ளது. தாவா கொள்ளைக்கு தெற்கே பஞ்சாயத்து போர்டு இடம், அதற்கு தெற்கே மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். ரோட்டின் கிழக்கே நிர்மலா என்பவர் மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு மேற்கே 3 ம் பிரதிவாதி மகன் வெங்கடேசன் வீடு உள்ளது என்றால் சரிதான். இருவருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அதற்கு மேற்கே மஞ்சமாறன் த/பெ. கோவிந்தன் இடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்கே 2 ம் பிரதிவாதி ரேவதி இடம் உள்ளது என்றால் சரிதான். 20 ஆண்டுகளுக்கு மேலாக ரேவதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கும் மேற்கே ராஜலெட்சுமி க/பெ. சத்தியபாலு இடம் உள்ளது. அவரும் 20 ஆண்டுகளுக்கு மேலாக ரேவதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சத்தியபாலன் இடத்தில் மாமரம், புளியமரம், மூங்கில் கொத்து உள்ளது என்றால் சரிதான். ரேவதி இடத்தை வேலி வைத்து அடைத்துவிட்டார்கள் என்றால் வழிக்காக எடுத்துவிட்டார்கள். அவர்களுக்கு பட்டா

வழங்கப்பட்டுள்ளது என்றால் அதன் விபரம் தெரியாது. முதல் பிரதிவாதி இடத்திற்கு மேற்கே பாதை உள்ளது என்றால் சரிதான். அது பொது பாதை என்றால்சரிதான். அந்த வழியாக தாவா சொத்திற்கு வர இயலாது. பொது பாதை வழியாக தான் வாதி அசோக் மற்றும் வாதி இடத்திற்கு செல்லலாம் என்றால் போக விடமாட்டார்கள். வண்டி செல்ல இயலாது. 8 அடி பாதை. மாட்டு வண்டி அந்த பாதையில் செல்லலாம் என்றால் சரிதான். அந்த காலத்தில் இருந்தே முதல் பிரதிவாதி இடத்திற்கு மேற்கே உள்ள பாதை வழியாக தான் அசோக் மற்றும் வாதிசென்று வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதியின் தோப்பிற்கு மேற்கே அசோக் என்பவர் தோப்பு சேர்ந்தார்போல் உள்ளது என்றால் சரிதான். அசோக் வாதியை செல்லவிடாமல் தடுத்ததால் வேறு பாதை இருப்பதாக பொய்யாக வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இடத்தில் பாதை இல்லை என்றால் சரியல்ல. வாதியிடம் நான் விவசாய கூலியாக வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.